மாண்புமிகு பேரவைத் தலைவர் : பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிவிட்டார். வேறு எப்படி மாற்றிச் சொல்ல முடியும்? பரிகாரம் காணத்தான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

திரு. என். பழனிவேல் : காலம் கடந்து பரிசீலனை செய்வதால் எந்த விதமான பயனும் இல்லை. இப்போது ஆகஸ்ட் மாதம் வந்துவிட்டது. காலாண்டு பரீட்சையும் வரப்போகிறது. இன்னும் புத்தகங்கள் கிடைக்க வில்லை. ஆகவே, அரசாங்கம் இதிலே இரக்கத்தோடு கவனம் செலுத்தி, இன்றோ அல்லது நாளையோ முடிவை அறிவித்தால் நல்லது. அந்த மக்களின் பாராட்டைப் பெறும்; முடிவை அறிவிப்பார்களா என்றும் அறிய விரும்பு கிறேன்.

(பதில் இல்லை).

விவசாயிகளுக்கான வாரச் சட்டம்

*கு. கா. வி. எண் 57—**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கான 75-25 வாரச்சட்டத்தை உடனடியாக அமுல் படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, 75-25 வாரச் சட்டத்தை அமுல் நடத்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன. 26—4—1980 முதல் அந்த உத்தரவுகள் அமுலுக்கு வந்துவிட்டன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, 75-25 சட்டம் பிறப்பிக்கப்பட்டு, 26—4—1980-லிருந்து அமுலில் இருப்பதாகச் சென்னார்கள். ஆனால் எந்த நிலச்சுவாந்தார்களும் அதை ஏற்றுக்கொள்ள வில்லை. அதுபற்றி அரசுக்கு புகார் வந்திருக்கிறதா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, எந்தச் சட்டம் வந்தாலும் அதனால் சிலருக்கு பாதகம் இருக்கத்தான் செய்யும்; பாதிக்கப்படுவார்கள். ஆனால் அரசுக்கு அதுபற்றி உரிய நேரத்தில் செய்தி வந்தால் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

1980 ஆகஸ்ட் 5]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை அமுல் நடத்த முடியாது என்று நிலச்சுவாந்தார்கள் மறுக்கிறார்கள். அவர்கள் மறுக்கிறார்கள் என்று அரசுக்கு புகார் வந்திருக்கிறதா? அந்தப் புகார் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, குறிப்பிட்ட புகார் எதுவும் அரசுக்கு வரவில்லை. ஏதாவது புகார் இருந்தால், உறுப்பினர் தெரிவித்தால், அரசு அதை கவனிக்கும்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, 75-25 வாரச் சட்டம் தமிழ் நாடு முழுவதும் அமுல் செய்யப்படுகிறதா? குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இன்னும் பழைய முறையிலேயே, 60-40 முறைப்படியே வசூல் செய்யப்படுகிறது அமைச்சருக்குத் தெரியுமா? அதுபற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, தமிழ்நாடு எல்லை எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த எல்லை வரையில் இந்தச் சட்டம் அமுலாகும். எங்காவது அமுல் நடத்தவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டத்தை அமுல்நடத்த ஏதாவது தனிப்பட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? இந்தச் சட்டத்தை மீறிய நிலச்சுவாந்தார்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, குத்தகை வாரச் சட்டத்தை செயல்படுத்த அதிகாரிகள் எப்போதும் இருக்கிறார்கள். ஆனால் எங்காவது தவறு நடக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால் அரசு நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறது. எந்தப் பகுதியிலாவது சர்ச்சை அதிகமாக இருக்கிறது என்று தெரிந்தால், தேவைப்பட்டால் அங்கே தனியாக கூடுதல் அதிகாரிகளை நியமிக்கவும் அரசு தயாராக இருக்கிறது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : தலைவரவர்களே, இப்போது நியாயவாரச் சட்டத்தை அமுல்நடத்த ஜில்லாவுக்கு ஒரு கோர்ட் இருக்கிறது. ஆனால் திருச்சி, தஞ்சை போன்ற பெரிய மாவட்டங்களில் நிறைய தகராறுகள் ஏற்படுவதால் அங்கே அதிகமான கோர்ட்டுகளை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(முற்பகல் 9.50)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இருக்கின்ற வழக்குகளை ஆராய்ந்து தேவைப்பட்டால் அதிகமாகப் போடுவ தற்கு அரசு தயாராக இருக்கின்றது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்தச் சட்டம் அமலில் இருக் கின்றது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பெருவாரியான விவசாயி களுக்கு இப்படிப்பட்ட சட்டங்களின் விவரம் தெரியாது. அதாவது தங்க ளுக்கு 75 பங்கு உரிமை என்ற இந்த சட்டத்தினுடைய விளக்கங்கள் அவர் களுக்குத் தெரியாது. அப்படித் தெரிந்திருந்தலும் அவர்கள் அதை உரிமை கொண்டாடப்போனால் உடனடியாக நிலத்திலிருந்து வெளியேற்றிவிடுவார் களோ என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கின்றது. ஆகவே இந்த அச்சத்தைப் போக்குகின்ற வகையில் பெரிய போஸ்டர்கள் தயாரித்து அதாவது குத்தகை தாரர்கள் நிலச்சுவான்தார்களுக்கு 25 அளந்தால் போதும் என்றும் 75 அவர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கின்ற பெரிய போஸ்டர்கள் தயாரித்து அவற்றை விவசாயிகள் இருக்கக்கூடிய பகுதிகளில் உள்ள போலீஸ் ஸ்டேஷ னிலே ஒப்படைத்து போலீஸ்காரர்கள் மூலமாக ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்வது நலமாக இருக்கும். அதன்மூலம் குத்தகை விவசாயிகள் நன்மை அடைகின்ற வாய்ப்பு ஏற்படும். ஆகவே அமைச்சரவர்கள் இந்த ஏற்பாட்டைச் செய்வதற்கு முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அரசினுடைய நல்ல சட்ட முன்வடிவுகள் சட்டமானதற்குப் பிறகு செய்தித்தாள்கள் அவற்றை நல்ல முறையிலே விளம்பரம் செய்கின்றன. ஆனால் சில நேரங்களில் குத்தகை விவசாயிகளுக்கு இந்த மாதிரி விவரங்கள் எல்லாம் தெரிவதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட செய்தி களைப்பற்றி அந்த விவசாயிகள் அறிந்துகொள்வதற்காகத்தான் விவசாயச் சங்கங்கள் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றன. இத்தகைய விளம்பரங்கள் எல்லாம் இருக்கின்றன. இவை போதவில்லை என்றால் மாண்புமிகு உறுப் பினர் அவர்களின் யோசனையின்படி விளக்கங்கள் தருவதற்கு இந்த அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த 75, 25 வாரச் சட்டத்தைப் பொறுத்தவரையில் சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்ற வகையிலே பாகுபடுத்தி செயல்படுத்துகின்ற வகை யிலே பரிசீலனை செய்ய அரசு முயற்சி செய்து வருகின்றதா?

1980 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட பரிசீலனை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் பதில் சொல்கின்றபோது 60, 40 சட்டம் தற்போது இல்லை 75, 25தான் அமலில் இருக்கின்றது என்று சொன்னார்கள். ஆனால் பல இடங்களில் குத்தகைச் சீட்டுக்கள் 60, 40 என்ற விகிதத்தில்தான் இருக்கின்றன. ஆகவே அந்த குத்தகைச் சீட்டுக்களை 75, 25 என்ற விகிதத்தில் மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அந்த வகையில் இன்ன தேதிக்குள் அந்த குத்தகைச் சீட்டுக்களைப் புதுப்பிக்க வேண்டும் என்று ஆணையிடுவதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, அந்த குத்தகைச் சீட்டுக்கள் செல்லாது. ஆகவே 75, 25 என்ற விகிதத்தில் குத்தகைச் சீட்டுக்களை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவரவர்களே, சிதம்பரம் தாலுக்காவில் புத்தூர் என்ற கிராமத்தில் இந்தச் சட்டப்படி கொடுக்கப்படமாட்டாது என்று தகராறு செய்யப்பட்டது. அது குறித்து அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டும், அமைச்சரவர்களுக்கு அனுப்பப்பட்டும் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனை அமைச்சரவர்கள் அறிவார்களா ? இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து உடனடியாக இந்தச் சட்டத்தின்படி கொடுப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இந்தச் சட்டம் பற்றி விவசாயிகள் அறிந்துகொள்கின்ற வகையில் போலீஸ் மூலமாக விளம்பரச் சுவரொட்டிகள் ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டார்கள். அதற்கு அமைச்சரவர்கள் சரியாகப் பதில் சொல்லவில்லை. அது குறித்து பதில் சொல்ல வேண்டும். அதோடு விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற வகையிலே அரசாங்கத்தின் பத்திரிகைகள் மூலமாக முழுப் பக்க விளம்பரம் செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, பயிரிடும் குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதுதான் இந்த அரசினுடைய அடிப்படைக் கொள்கை. இந்தச் சட்டம் குறித்து செய்தித்தாள்கள் முடிந்த வரையிலும் செய்திகளை எல்லாம் வெளியிடுகின்றன. இதுவும் போதவில்லை என்றால் விவசாயச் சங்கங்கள் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக் கின்றன. இது குறித்த விளம்பர சுவரொட்டிகளை காவல் துறையின் மூலமாக ஒட்டவேண்டும் என்று சொல்லப்படுவதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் எந்த அளவிற்கு இது குறித்து விளம்பரம் செய்ய முடியுமோ, அல்லது சுவரொட்டிகள் மூலம் விளம்பரம் செய்ய முடியுமோ அவைகளைச் செய்வதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Amendment to Factories Act

* *S.N. Q. No.* 58—Thiru J. HEMACHANDRAN : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the Government are aware that the workers are put to much hardship on account of the provisions in the Factories Act that 240 days actual work had to be turned out for the entitlement of leave with wages in each year; and

(*b*) the steps taken to modify the Act as recommended by the State Labour Advisory Board in 1975.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மாநில தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், 1948-ம் ஆண்டு தொழிற்சாலை சட்டத்தின் 79-வது பிரிவிற்கு பொருத்தமான திருத்தங்கள் செய்ய ஒப்புதல் கேட்டு மத்திய அரசுக்கு, இந்த அரசு ஒரு கடிதம் எழுதியது. இந்தச் சமயத்தில் பம்பாயிலுள்ள இந்திய அரசின் தொழிற்சாலை ஆலோசனை பணி மற்றும் தொழிலாளர் நிலையங்களின் டைரக்டர் ஜெனரல் அவர்கள் (Director General, Factory Advice Service and labour Institutes Bombay) ஒரு 'கேலண்டர்' ஆண்டில், ஒரு தொழிலாளி ஊதியத்துடன் கூடிய விடுப்பு எடுப்பதற்கு 240 நாட்கள் வேலை செய்ய வேண்டும் என்ற அருகதையை 180 நாட்களாக குறைக்கும் வகையில் பொருத்தமான திருத்தங்களைத் தொழிற் சாலை சட்டங்களில் கொண்டுவர மத்திய அரசுக்குத் தாமே பரிந்துரை செய் திருப்பதாக இந்த அரசுக்குத் தெரிவித்துள்ளார். டைரக்டர் ஜெனரல் (Director General) அவர்கள் நல்கிய திருத்தங்கள் தொழிலாளர்களுக்கு